செ.வெ.எண் 243　　　　　　　　　　நாள் 18.03.10

# செய்தி

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 2.07 கோடி மின் நுகர்வோர்கள் உள்ளனர். இம்மின் நுகர்வோர்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு வசதிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் படிப்படியாக அறிமுகப்படுத்திக் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இதன் அடிப்படையில் பெருகி வரும் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை பயன்படுத்தி தமிழ்நாடு மின்சார வாரியம் ஆங்கில இணையத்தளம் வாயிலாக மின் நுகர்வோர் சேவையை அளித்து வருகிறது. இதன் மூலம் மின் வாரியத்தை பற்றிய முகப்பு குறிப்புகள், நுகர்வோர்க்கான சேவைகள், மின் கட்டண சேவை மற்றும் மின் துறை பற்றி வேறு பல செய்திகளும் அடங்கியுள்ளன. மேலும் மின் நுகர்வோர்களுக்கு தேவையான அனைத்து விவரங்களும் இவ்விணையத்தளம் மூலமாக மக்கள் அறிந்து கொள்ளலாம்.

இச்சேவையை மேலும் விரிவு படுத்தும் நோக்கோடு மேற்சொன்ன அனைத்து விவரங்களையும் எளிதாக செம்மொழியாம் தமிழில் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ் இணையத்தளம் உருவாக்கப்பட்டு தற்போது பொது மக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாடுகள் அனைத்தும், கணிணி வசதியை பயன்படுத்தும் அனைத்து தரப்பு தமிழ் மக்களுக்கும் வலைதளம் மூலமாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வசதியை பயன்படுத்தி தமிழக மக்கள் அனைவரும் பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9